2019 ஜனவரி 5]

கடையைத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

13—

உதவிப் பொறியாளர் அலுவலக புதிய கட்டடம்

***16663—திரு. துரை. கி. சரவணன்:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. தங்கமணி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய புவனகிரி தொகுதி, புவனகிரி பேரூராட்சியிலுள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டிருக்கின்றது. 19–1–2019 அன்று ஒப்பந்தப்புள்ளியை திறக்கவிருக்கின்றோம். கூடிய விரைவிலே ரூ.30 இலட்சம் செலவில் அந்தக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களை வணங்குகிறேன். எங்களது கழகத் தலைவரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான அண்ணன் அவர்களையும் வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் புவனகிரியில் உதவி மின்*

பொறியாளர் அலுவலகம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்று தெரிவித்துள்ளார்கள். அதற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

புவனகிரி தொகுதி, கீரப்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கீரப்பாளையம் ஊராட்சிப் பகுதியில் உள்ள சுமார் 25 கிராமங்களுக்கு மத்தியில் அமைந்துள்ள கிராம ஊராட்சியாகும். வேகமாக வளர்ந்துவரும் ஊராட்சி. அதிக மக்கள் தொகையைக் கொண்ட ஊராட்சி. இங்கே ஊராட்சி ஒன்றிய அலுவலகம், உயர் நிலைப் பள்ளி, அதனருகில் தனியார் கல்லூரிகள் ஆகியவை அமைந்துள்ளன. இந்த ஊராட்சியில் இயங்கிவரும் துணை மின் நிலையம் மூலமாக மின் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இந்த ஊராட்சி மற்றும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளில் வருங்காலங்களில் அதிக மின் தேவை ஏற்படும் சூழ்நிலை உள்ளதால், இங்குள்ள துணை மின் நிலையத்தை மேம்படுத்தி 33/11 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையமாக அமைத்திட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10—20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய அந்தக் கோரிக்கை, அந்தப் பகுதியினுடைய மின்னழுத்தத்தைப் பொறுத்தது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப் பார்க்கின்றபோது, அங்கே 11 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் இருக்கிறதென்று நினைக்கின்றேன். அதனை 33 கே.வி.ஏ. ஆக தரமுயர்த்த வேண்டுமென்று கேட்கின்றார்கள். இந்த ஆண்டு கிட்டத்தட்ட 120 துணை மின் நிலையங்களை அமைத்திருக்கின்றோம் என்று நான் ஏற்கெனவே பல முறை சொல்லியிருக்கின்றேன். அந்த அடிப்படையில் எதிர்காலத்தில் மின் தேவை இருப்பின், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசால் நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்துப் பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜனவரி 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. துரை. கி. சரவணன் அவர்கள்.*

திரு. துரை. கி. சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதியில் விருத்தாசலம் கோட்டத்திற்குட்பட்ட கம்மாபுரம் ஒன்றியம், மேலப்பாலையூர் கிராமத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள புதிய துணை மின் நிலையம் அமைக்க கடந்த 2018 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 7.32 கோடி ரூபாய்க்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, சுமார் 9 மாதங்களாகியும் அதற்கான பணி இன்றுவரை தொடங்கப்படவில்லை. மேலப்பாலையூர் கிராமப் பகுதியில் உள்ள கீழப்பாலையூர் மற்றும் சி. கீரனூர் ஆகிய கிராமங்களில் 33/11 கே.வி.ஏ. துணை மின் நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவற்றிற்கு சுமார் 20 கிலோ மீட்டர் தூரம் உள்ள விருத்தாசலம், பூதாமூர் பகுதியிலுள்ள 110/33 கே.வி.ஏ. துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுகிறது. இந்த பூதாமூர் துணை மின் நிலையத்தில், அதிக மின் பளு இருப்பதன் காரணமாக கீழப்பாலையூர் மற்றும் கீரனூர் துணை மின் நிலையங்களுக்கு சீரான மின் விநியோகம் கிடைப்பதில்லை. 25 கிராமங்களுக்கு மேல் இருக்கக்கூடிய இந்தப் பகுதியில் வாழும் மக்கள் சுமார் 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் மூன்று போகமும் அதிக அளவில் நெல் மற்றும் கரும்பு விவசாயம் செய்து வருகின்றார்கள். இங்கு சீரான மின் விநியோகம் இல்லாத காரணத்தினால், இந்தப் பகுதி விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றார்கள். எனவே, மேலப்பாலையூர் கிராமத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையத்தை அமைத்துக் கொடுத்தால் இந்தப் பிரச்சினைக்கு ஒரு தீர்வாக அமையும். எனவே, மேலப்பாலையூரில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைக்கும் பணிகளை உடனடியாகத் துவங்கிட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கம்மாபுரம் ஒன்றியம், மேலப்பாலையூர் ஒன்றியத்தில் 110/33 கே.வி.ஏ. திறனுள்ள துணை மின் நிலையம் அமைப்பதற்காக ஒப்பந்தம் கோரப்பட்டு அது அப்படியே நிற்கின்றது என்று சொல்லியிருக்கின்றார்கள்.*

[*2019 ஜனவரி 5*

இடம் கையகப்படுத்துவதில் ஏதாவது பிரச்சினை இருக்குமென்று நினைக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை குறித்து அதிகாரிகளோடு கலந்துபேசி, அப்படி ஒப்பந்தம் கோரப்பட்டிருந்தும், வேறு ஏதாவது பிரச்சினை இருக்கின்றதா என்பதை ஆய்வு செய்து, அதன்மீது உடனடியாக நடவடிக்கை எடுத்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய பகுதிகளுக்கு சீரான மின்சாரம் தருவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு வழிவகுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. கார்த்திக் அவர்கள்.*

திரு. நா. கார்த்திக்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிங்காநல்லூர் தொகுதிக்குட்பட்ட கோவை மாநகராட்சி, 56–வது வட்டம், பீளமேடு டவுன் கிழக்குப் பகுதியில் குறிப்பாக, அண்ணா நகர் பகுதியில் உதவி மின் பொறியாளர் அலுவலகம் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. மாநகராட்சியினுடைய பொது ஒதுக்கீட்டு இடங்கள் அந்தப் பகுதியில் நிறைய இருக்கின்றன. எனவே, மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் மாநகராட்சியினுடைய ஆணையர், உள்ளாட்சித் துறை அமைச்சர் ஆகியோரிடத்தில் பேசி, மின் வாரியத்தினுடைய உதவி மின் பொறியாளர் அலுவலகக் கட்டடத்தை கட்டித் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மொத்தம் 2,176 அலுவலகங்கள் இருக்கின்றன. அவற்றில் 1,699 அலுவலகங்கள் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பீளமேடு டவுன் கிழக்குப் பகுதியில் உள்ள உதவி மின் பொறியாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாநகராட்சிக்குச் சொந்தமான இடங்கள் இருக்கின்றன; அந்த இடத்தைப் பெற்று,*

2019 ஜனவரி 5]

அந்த இடத்திலே அலுவலகத்திற்கான கட்டடத்தைக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நியாயமானதுதான். ஆனால், அதில் இருக்கின்ற சிக்கல் என்னவென்று சொன்னால், மாநகராட்சியாக இருந்தாலும்கூட மின்சாரத் துறைக்கு வருகின்றபோது அதனுடைய வழிகாட்டு மதிப்பீட்டில் என்ன இருக்கின்றதோ அந்தத் தொகையை நாங்கள் கட்ட வேண்டும். அதனுடைய மதிப்பு அதிகமாக இருந்திருக்கும். அது ஒரு காரணமாக இருந்திருக்கலாம்; அல்லது மாநகராட்சி அந்த இடம் தேவை என்று கருதி, அந்த இடத்தைக் கொடுக்க மறுத்திருக்கலாம். ஆக, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கை குறித்து அதிகாரிகளோடும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடும் ஆலோசித்திருக்கிறேன். அதோடு மாநகராட்சி நிருவாகம் அந்த இடத்தைக் கொடுக்குமேயானால், தேவை இருப்பின், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை நிறைவேற்றித் தரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். மூர்த்தி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

14—

உயர் கோபுர மின் விளக்கு

***10253—திரு. கே.எஸ். மூர்த்தி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பரமத்திவேலூர் தொகுதி, பரமத்தி ஊராட்சி ஒன்றியம், கந்தம்பாளையம், மணியனூர் ஒத்தரசு மற்றும் நடந்தை ஆகிய பகுதிகளில் உயர் கோபுர மின் விளக்குகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

முற்பகல் 10–25

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*